
Softwar



Signature valid Signature valid

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம் (ம) ஊராட்சி ஒன்றியம், காரகுப்பம் ஊராட்சி, சாலிநாயனப்பள்ளி கிராமம், புல எண்: 249/6B, 250/4B & 251/2B - ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1 அங்குலம் 66 அடி = (1:800)

இணையதள விண்ணப்ப எண் :7SPQC2RI/2025

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு	:	2.01.61 ஹெக்டர் (அ) 20161.00 ச.மீ	
மனைப்பிரிவின் சாலை பரப்பு	:	6745.18 ச.மீ	
மனைப்பிரிவின் பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக)	:	13415.82 ச.மீ	
ஒதுக்கிய மனைகள்	:	101(வரிசை பிரிவு மனைகள்:1,2, 3, 17to23, 32 to 39, 63 to 67, 72 & 73 -1431.47 ச.மீ (10.67%)	
மனைப்பிரிவின் எல்லை	:		(சிவப்பு கோடு)
நிலையிலுள்ள சாலை	:		(மஞ்சள்)

பொது உபயோகம் :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

மனைப்பிரிவின் சாலை பரப்பு	:	6745.18 ச.மீ	(பழுப்பு)
உள்ளாட்சிக்கான பொது உபயோகம்	:	73.65 ச.மீ 0.54 %	(இளஞ்சிவப்பு)
பூங்கா(1+2)	:	1394.33 ச.மீ 10.39 %	(பச்சை)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி:

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீடு	:	72.86 ச.மீ 0.54 %	(ஆரஞ்சு)

மூலை முடக்கு : 12.00 மீ அகல சாலை வரை 1.50 x 1.50 விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்: 181 வீ.வ (ம) ந.பு.வ.துறை நாள்:09.12.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், தனி அலுவலர் கிராம ஊராட்சி காரகுப்பம் ஊராட்சி பர்கூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு 0.6 மீ X 1.2 மீ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பெயில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம் குத்தகை பத்திரம் பட்டா தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
7. The Tamil Nadu Government in G.O.Ms.No.112 Housing And Urban Development Department Dated 22.06.2017 Have Approved The Tamil Nadu Real Estate(Regulation & At 2016 The Promoter Has to Advertise.Market.book sell (or) offer For Sale (or) Invite Person To Purchase in Any Plot,Apartment (or) Building as The Case May Be,in Any Real Estate Project Of it Only After Registering The Real Estate Project With The Real Estate Regulatory Authority.
8. வரைபடத்தில் உள்ள நிலவியல் நீர்வழிப்பாதையின் இடையிடையே மனுதாரர் சொந்த செலவில் 0.8மீ அகல அகழி வாய்க்கால் (Trench Drain) அமைக்கப்படவேண்டும் மேலும் நீர்வழிப்பாதையை தடுக்கவோ அடைக்கவோ கூடாது.

ம.வ / ஓ.பு.ந.வ.கு.(கி.மா) SWP எண்: **218 / 2025**

உதவி இயக்குநர்/ துணை இயக்குநர்(மு. கூ. பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர்.